Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | OS.No.79/2024 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.1 |
| | | Defence | |
| Name | | **திரு.ராஜமுத்துராமலிங்கம்** | |
| Father's Name | : | **திரு.நீலகண்டன்** | |
| Village | : | **மீனாட்சிபுரம்** | |
| Taluk | : | **திருநெல்வேலி** | |
| Calling | : | **வாதி** | |
| Age | : | 48 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 9th day of February 2026.

**<u>முதல் விசாரணை</u> :–**

**நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.** 02.08.1985 **ம் தேதியிட்ட பெருமாள் என்பவர் பெயரில் இருக்கும் கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.1**. 22.02.2007 **ம் தேதியிட்ட பெருமாள் எழுதிக்கொடுத்திருக்கும் உயில் ஆவணம் அசல் வா.சா.ஆ.2**. 11.05.2018 **ம் தேதியிட்ட பெருமாள் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.3**. 04.08.2023 **ம் தேதியிட்ட** 5 **ம் பிரதிவாதி பெயரில் இருக்கும் கிரைய ஆவணம் சப்ரி நகல் வா.சா.ஆ.4**. 05.08.2023 **ம் தேதியிட்ட** 5 **ம் பிரதிவாதி பெயரில் இருக்கும் கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.5**.

07.08.2023ம் தேதியிட்ட 5ம் பிரதிவாதி பெயரில் இருக்கும் கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ.6**. 02.12.2023ம் தேதியிட்ட வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அசல் ரசீது **வா.சா.ஆ.7**. 22.01.2024ம் 1ம்பிரதிவாதி அனுப்பி பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.8**. 06.12.2023ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதி வாங்காத காரணத்தினால் திரும்ப வந்த நோட்டீஸ் அசல் **வா.சா.ஆ.**9. 04.12.2023 தேதியிட்ட 3ம் பிரதிவாதி வாங்காத காரணத்தினால் திரும்ப வந்த நோட்டீஸ் அசல் **வா.சா.ஆ.10**. 06.12.2023ம் தேதியிட்ட 4ம் பிரதிவாதி வாங்காத காரணத்தினால் திரும்ப வந்த நோட்டீஸ் அசல் **வா.சா.ஆ.11**. 06.12.2023ம் தேதியிட்ட 5ம் பிரதிவாதி வாங்காத காரணத்தினால் திரும்ப வந்த நோட்டீஸ் அசல் **வா.சா.ஆ.12**. வாதி பிரதிவாதிகளின் மீது மாநகர் குற்றப்பிரிவில் கொடுத்திருக்கும் புகார் மனு அலுவலக நகல் **வா.சா.ஆ.13**. 07.02.2024ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை குற்ற எண். 2/2024 **வா.சா.ஆ.14**. பிராது படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் எனது மாமா கிரையம் வாங்கியருந்தார் என்றால் சரிதான். மேற்படி சொத்து தற்போதும் காலி மனையாக தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் பெருமாள் எனக்கு ஒரு உயில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். 11.05.2018 ல் பெருமாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெருமாள் வாங்கிய கிரையப்பத்திரத்தின் அசலும், உயில் ஆவணத்தின் அசலும் என் கைவசம் தான் உள்ளது என்றால்

சரிதான். தாவா சொத்தின் அனுபவம் என்னிடம் தான் உள்ளது. 1 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல்செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் உண்மையானது என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு உயில் இருப்பது தெரியாமல் 5 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதாலும், 5 ம்பிரதிவாதி இறந்துவிட்டதாலும் அந்த கிரையப்பத்திரங்களை தற்போது ரத்து செய்ய முடியாததால் தற்போது நீதிமன்றம் மூலமாக ரத்து செய்வதற்கு 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை .

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.